# திருவாசகத்தில் பெண்மை

**முனைவர் சந்திரிகா சுப்ரமண்யன்**
**வழக்குரைஞர், ஆஸ்திரேலியா.**

54

**ஆய்வுச்சுருக்கம்**

பெண்மையின் கூறுகள் எல்லா வகை இலக்கியங்களிலும் காண முடியும். தமிழில் தொல்காப்பியம் முதல் இன்றைய புதுக்கவிதையில் ஹைக்கூ சென்ரியு கவிதைகள் வரை பெண்மை என்பது பேசப்படக்கூடிய ஒன்றாக மிளிர்ந்து வருகிறது. தமிழின் மேன்மையை பறைசாற்றக்கூடிய பக்தி இலக்கியங்களில் பெண்ணியம் பற்றியும் பெண்மையின் கூறுகள் பற்றியும் நிறைய காண முடிகிறது.அவ்வகையில் திருவாசகத்தில் காணப்படும் பெண்ணியம் சார்ந்த கூறுபாடுகளை எடுத்துரைக்கும் விதமாக இக்கட்டுரை இடம்பெற்று இருக்கிறது.அகத்துறை மரபுகளை பக்தி இலக்கியங்களில் புகுத்தி பார்க்கக்கூடிய மரபு நாயன்மார்களிடமும் ஆழ்வார்களிடமும் காணப்படுகிறது.அந்த வகையில் திருவாசகத்தில் அக இலக்கிய மரபுகளை காணும் நோக்கோடு இவ்வாய்வு கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

**முன்னுரை**

பக்தி இலக்கியங்களைப் புறம் தள்ளி விட்டு தமிழ் இலக்கிய வரலாற்றை நாம் நோக்க முடியாது. உலக மொழிகளிலே பக்திக்கான சிறந்த மொழியாக கருதப்படுவது தமிழ் மொழியேயாகும். தனிநாயகம் அடிகளார், 'தமிழை பக்தியின் மொழி என்றால் பொருந்தும்' என்று கூறுகின்றார்.

தமிழில் உள்ள பக்தி இலக்கியங்களை தேவாரங்கள் திருவாசகம் திருமந்திரம் , நாலாயிரம் திவ்ய பிரபந்தங்கள், பெரிய புராணம் திருப்பாவை, திருவெம்பாவை, திருச்சதகம் எனப் பட்டியலிடலாம்.

காதலும் காதல் சார்ந்த அன்பும் இறைவனிடத்திலும் கூட ஏற்படலாம் என்பதற்கு திருப்பாவையும், திருவாசகமும் திருக்கோவையும் சான்றுகளாக உள்ளன.

**திருவாசகத்தில்** அகத்துறை மரபுகள்

அகத்துறை மரபுகளை பக்தி இலக்கியங்களில் இணைத்துக் கொண்டதால் வாழ்க்கை முறைகளுடன் கூடிய படைப்புகளாக அவை அமைந்துள்ளன. அதனால் மக்கள் அவற்றை தம் வாழ்க்கையுடன் இணைத்துக் கொள்வது சாத்தியப்படுகின்றது.

சங்கப் பாடல்களில் இடம் பெறும் தலைமகன், தலைமகள், தோழி, செவிலி, நற்றாய் போன்ற கதாபாத்திரங்கள் வாயிலாக காதலைச் சொல்லும் அகப் பாடல்கள் இடம் பெற்றுள்ளன. குறிப்பாக பெண்கள் நிலையில் நின்று பாடப்பட்ட பாடல்கள் பெண்கள் சங்க கால சமூகத்தில் பெற்றிருந்த சமூக நிலையைக் காட்டுகின்றது.

சங்ககாலம் தொட்டு பெண்கள் குழாமாகச் சென்று புனலாடும் பழக்கம். இருந்ததாக குறுந்தொகைப் பாடல்கள் மூலம் அறிகிறோம்.. இயற்கையோடு இணைந்து புனலாடும் தமிழ்ப்பெண்களின்

விளையாட்டு இருந்ததை நற்றிணையில் பூதன் தேவனார் 'தைந்நீராடல்' என

"**இழைஅணி ஆயமொடு தகுநாண் தடைஇத்**
**தைஇத்திங்கள் தண்கயம்படியும்**
**பெருந்தோட் குறுமகளல்லது**
**மருந்து பிறிதில்லை, யான் உற்ற நோய்க்கே'1**
**(நற்றிணை-பா-80)**

என்ற பாடலடிகள் மூலம் முதன் முதலில் பதிவு செய்திருக்கின்றார்.

ஆண்டாளின் திருப்பாவை

ஆண்டாளின் திருப்பாவை தைந்நீராடலை முன்னிலைப் படுத்தி பாடப்பட்ட பாடல்களாகும். மாணிக்கவாசகரும் திருவெம்பாவையில் பெண்கள் பாடும் பாடல்களாகவே சிவத்தைச் சிந்தையில் கொள்கின்றார். பன்னிரு திருமுறையில் எட்டாம் திருமுறை எனப்படும் திருவாசகம் ஐம்பத்தொரு பிரிவுகளின் கீழ் 658 பாடல்களை சிவபுராணம் முதல் அச்சோப்பதிகம் வரை கொண்டுள்ளது."**திருவாசகத்திற்குஉருகாதார் ஒருவாசகத்திற்கும் உருகார்**" என்ற தொடர், அப் பாடல்களின் கனிவுத் தன்மையைப் புலப்படுத்துகிறது . அதன் காரணம் அதில் உள்ள பெண்மைக்குரிய அம்சங்களோ என்றே கருதத்தோன்றுகிறது!

திருவாசகத்தில் ,

**'பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்**
**பரிந்து நீ பாவியேனுடைய**
**ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி'2**
(பிடித்த பத்து)

என்றும்

*தாயிற் சிறந்த தயாவான தத்துவனே* 3 (சிவபுராணம் வரிகள்- **பிடித்த பத்து- 33-36**)

என்றெல்லாம் தாய்மை பேசும் மாணிக்கவாசகர் அன்பினால் உருக்கும் பாடல்களின் தன்மை கண்டு வியந்து திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த டாக்டர் ஜி.யூ. போப் 'எலும்பை உருக்கும் பாட்டு' என்ற கருத்தை முன் வைக்கிறார்.

"**ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெரும்**
**சோதியை யாம் பாடக்கேட்டேயும் வாள்தடங்கண்**
**மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்**
**மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலி போய்**
**வீதிவாய்க் கேட்டலுமே விம்மி விம்மி மெய்ம்மறந்து**
**போதுஆர் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்கண்**
**ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே! என்னே!**

**ஈதே எம்தோழி பரிசேலோர் எம்பாவாய்!" 4**

( திருவெம்பாவை-1)

என்று திருவெம்பாவையில் வரும் இருபது பாடல்களும் பெண்மையைச் சார்ந்து பக்தியைப் பேணுகின்றது. இறைவன் மீது தாம் கொண்டுள்ள அதிகமான பற்று காரணமாக , தம்மை நாயகியாகவும், இறைவனை நாயகனாகவும் பாவித்துப் பாடுகிறார் மாணிக்க வாசகர்.

**மாணிக்கவாசகர் திருவாசகம்**

மாணிக்கவாசகர் திருவாசகத்தில் நாயக - நாயகி பாவத்தை ஓர் இலக்கிய உத்தியாகப் பயன்படுத்தி மகளிர் விளையாட்டுகள் மூலம் தம் பக்தியின் உச்சத்தை வெளிப்படுத்திப் படைத்திருக்கின்றார். அவ் விளையாட்டுகள் , திருவெம்பாவை, திருவம்மானை, திருப்பொற்சுண்ணம், திருக்கோத்தும்பி, திருத்தெள்ளேனம், திருச்சாழல் ,திருப்பூவல்லி, திருவுந்தியார், திருத்தோள் நோக்கம், திருப்பொன்னூசல் ஆகும். திருவாசகத்தில் உள்ள 683 பாடல்களில் 163 பாடல்களில் ஆறு அல்லது ஏழு வயதுச் சிறுமி முதல் பதினெட்டு வயது இளம் பெண்கள் விளையாடும் விளையாட்டுக்கள் இடம்பெற்றுள்ளன. வயது வாரியாக விளையாடும் விளையாட்டுக்களைக் கொண்டு தன் பாடல்களைப் பாடும் மாணிக்க வாசகர் திருமணப் பருவத்திலுள்ளவர்கள் மட்டுமே விளையாடும் விளையாட்டை காதல் உணர்வுடன் வெளிப்படுத்தி இருக்கிறார். பெண்பாற் பிள்ளைத் தமிழ் தவிர , திருவாசகத்தில் மட்டுமே ஏறத்தாழ நான்கில் ஒரு பகுதி மகளிர்க்குரிய பாடல்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது சிறப்பாகும்.

மாணிக்கவாசகர் திருவாசகத்தில், பெண்மையைச் சார்ந்து, இறைவனை அடையும் வழிமுறைகளை மகளிர் விளையாடல்களின் மூலம் பாடும் போது குறிப்பாக தானே இவ் விளையாட்டுகளில் ஈடுபட்டு பாடுவதாகவே இப்பாடல்கள் அமைந்துள்ளன.

திருப்பொற்சுண்ணத்தில் மாணிக்கவாசகர்,

"**மாடுநகை வாள்நிலா எறிப்ப**
**வாய்திறந் தம்பவளம் துடிப்பப்**
**பாடுமின் நம்தம்மை ஆண்டாறும்**
**பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடி**
**தேடுமின் எம்பெருமானைத் தேடிச்**
**சித்தம் களிப்பத் திகைத்துத் தேறி**
**ஆடுமின் அம்பலத்து ஆடினானுக்கு**
**ஆடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே"** 5

(திருப்பொற்சுண்ணம்-9)

என்று தான் ஆடுவதை உறுதி செய்கிறார்.

அவர் பாடியிருப்பது, ஆண்டாள் பெண்ணாக நின்று பாடியிருப்பதிலிருந்து மாறுபடுகிறது. ஆண்டாள் ஒரு பெண் , அவளுக்கு பெண்மையின் உணர்வுகள் இயல்பானவை . ஆனால் ஓர் ஆண் தன்னைப்

பெண்ணாகவே பாவித்து மகளிர் விளையாட்டுக்களை விளையாடி இறை சிறப்பை எடுத்துரைப்பது முற்றிலும் கடினமானது. இறைத் தன்மையை உணரும் போது மாணிக்கவாசகரிடமிருந்து ஆண், பெண் என்ற பேதங்கள் மறைந்து போகின்றன.

அதனால் தான் மாணிக்கவாசகர் தன் படைப்பில் அலி என்ற சொல்லை மூன்றாம் பாலினத்தைக் குறிக்க பல இடங்களில் பயன்படுத்துகின்றார்.

**''பெண்ணாகி ஆணாய் அலியாய் பிறங்கொளிசேர்**
**விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகி''** 6

(திருவெம்பாவை-18 )

**"பெண்ணாளும் பாகன்"**7 (திரு அம்மானை -10)

"**ஆண் எனத் தோன்றி அலி எனப் பெயர்ந்து**"8

(திருவண்டபகுதி-19)

"**பெண்மையனே தொன்மை ஆண்மையனே அலிப் பெற்றவனே"9**

**(**நீத்தல் விண்ணப்பப் பாடல்-22)

"**ஆணோ அலியோ அரிவையோ"** 9

(திருப்பொன்னூசல் பாடல் -16)

என்று பாடியுள்ளார். இவ்வாறாக, பெண்மையை , பெண் தன்மையை, ஆண் பெண்ணாகி நிற்கும் மூன்றாம் பாலினத்தின் உணர்வுகளை இறையோடு இணைக்கும் பாலமாக திருவாசகம் அமைந்துள்ளது.

முடிவுரை

திருவாசகத்தின் சிறப்பையும், பக்தியின் மேன்மையையும் கண்டு **'பாவை பாடிய வாயால் கோவை பாடுக'** என்று சிவபெருமானே அசரிரி வடிவத்தில் மணிவாசகரை திருக்கோவையார் பாடல் இயற்ற ஆணையிட்டார் என்றும், அந்த நூலை சிவபெருமானே தன் கைப்பட ஓலைச்சுவடியில் எழுதி கைசாற்று இட்டதாகவும் சொல்லப்படுவதை உண்மை என்றே கொள்ளலாம்.

நாயக-நாயகி பாவம் என்பது பக்தியோகத்தில் மிக உயர்ந்த நிலையாகும், என்பதை திருவெம்பாவை, திருக்கோவைப் பாடல்கள் விளக்குகின்றன. மாணிக்கவாசகர் தான் ஒரு ஆண் என்ற மம்மர் நீங்கி மமதையை அறுத்து பெண் என்னும் எளிய இனிய மனநிலையுடன் இறைவனைத் துதித்து இயற்றப்பட்ட இப்பாடல்கள் பிறப்பறுக்கும் பேரின்ப வித்துக்கள் ஆகும்.

**மேற்கோள்**

1. **(நற்றிணை-பா-80)**
2. (பிடித்த பத்து)
3. சிவபுராணம் வரிகள்- **பிடித்த பத்து- 33-36**
4. திருவெம்பாவை-1
5. திருப்பொற்சுண்ணம்-9

6. திருவெம்பாவை-18
7. திரு அம்மானை -10
8. திருவண்டப்பகுதி-19
9. நீத்தல் விண்ணப்பப் பாடல்-22
10. திருப்பொன்னூசல் பாடல் -16